## முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
## முன்னிலை : திரு. எஸ். விஜயகுமார் எம்.ஏ., எம்,எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்

## 2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் திங்கள்கிழமை
## அசல் வழக்கு எண்.34/2022
## (CNR.NO.TNVP02-000066-2022)

செஞ்சி வட்டம், அனந்தபுரம் கிராமம், காமராஜர் தெருவில் வசிக்கும் தற்காலம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருப்பாச்சானூர் அஞ்சல், தளவனூர் கிராமம் நெ.73 விநாயகர் கோவில் தெருவில் வசிக்கும் கண்ணன் குமாரர் இந்து சுமார் 35 வயதுள்ள கோவிந்தன்.

.... வாதி

/எதிர்/

செஞ்சி வட்டம், அனந்தபுரம் அஞ்சல், கொனலூர் கிராமத்தில் வசிக்கும் ஆறுமுகம் குமாரர், இந்து, சுமார் 47 வயதுள்ள தவமணி.

.... பிரதிவாதி

தாவா A, B மற்றும் C பிராமிசரி நோட்டுகள் அடிப்படையில் வாதிக்கு சேரவேண்டிய தொகையான ரூ.6,00,000/- மற்றும் தாவா தேதி வரையில் வட்டியில் கூடியது ரூ.1,02,866/- ஆக மொத்தம் தொகை ரூ.7,02,866/- இந்த தாவா செலவுகள் ரூ.6,00,000/-க்கு வழக்கு முடிவடையும் வரையில் 9% வீதமும் பிறகு 6% வீதமும் பின்வட்டி முதலான அனைத்தும் வாதிக்கு பிரதிவாதியால் தாவா செலவுத் தொகைகளும் கிடைக்க தீர்ப்பு செய்ய வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

இத்தாவா 06.01.2022 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவின் மதிப்பு ரூ.7,02,866/-க்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பரிவு 22-ன்படி ரூ.21,086/- செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தாவா 09.01.2020, 20.06.2020 ஆகிய தேதிகளில் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், தளவனூர் கிராமத்தில் வியாஜ்ஜிய மூலம் உற்பத்தி.

இவ்வழக்கு 02.01.2023 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னா் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞா் திரு.பொன்.அ.சிவா அவா்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சாா்வாகி அவா் வழக்கறிஞா் மூலம் ஆஜராகிவிட்டு பின் பிரதிநிதித்துவம் இல்லாமல் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவா் ஒருதலைப்பட்சமாக தீா்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீா்ப்பாணை

1. தாவாவில் வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.7,02,866/- மற்றும் அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீா்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியடன் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

2. வாதிக்கு, பிரதிவாதி அசல் தொகை ரூ.6,00,000/-க்கு தீா்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியுடன் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

3. தொகை செலுத்த 2 மாத கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

4. தாவாவின் செலவுத் தொகை ரூ.26,040/-ஐ பிரதிவாதி வாதிக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

**செலவுத் தொகை பட்டியல்**

| | வாதி தரப்பு<br>ரூ. பை. | பிரதிவாதி தரப்பு<br>ரூ. பை. |
|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | 21,086.00 | செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை |
| வக்காலத்து | 10.00 | |
| சம்மன் படி | 5.00 | |
| எழுத்துக்கூலி | 50.00 | |
| அறிவிப்பு செலவு | 100.00 | |
| வழக்கறிஞர் ஊதியம் | 4,789.00 | |
| **மொத்தம்** | **26,040.00** | |

(வாதி தரப்பில் செலவுத் தொகை பட்டியல் ரூ.46,754.50/-க்கு தாக்கல் செய்யப்பட்டு ரூ.26,040.00/-க்கு அனுமதிக்கப்படுகிறது)

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டுத்தரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>Decree :-</u>**

OS.No.34/2022
DD : 30.01.2023
Psjc, Vpm.